ஓம்

விநாயகன் றுணை.

ஸ்ரீ ராம நாம ப்ரபாவ

தோத்திரமெனும்

# உயிர் மெய் வருக்கப் பாமாலையும் இராம நாமாவளியும்

இஃது

சென்னமா நகர்

ஸ்ரீஅகஸ்திய மஹரிஷி மரபு

சாது. நாராயண தேசிகர் மடாலயாதிபதி

ஸ்ரீ ஞானந்த மணவாள தேசிகரவர்களின் பிரதம சீடராகிய

**உயர் திரு சுவாமி அருணகிரிநாதரவர்களால்**

செய்யப்பட்டு

ஐக்கிய மலாய் நாட்டி லொன்ருகிய

பேரா மாகாணத்தின் சமாதான நீதிபதி பட்டவர்த்தனரும்

ஈப்போ வாசியும் பிரபல வர்த்தகருமாகிய

காரைக்குடி

**சா. லெ. செ. செட்டியப்ப செட்டியார்**

அவர்கள் விரும்பியவண்ணம்

அவர்கள் பொருளுதவியைக் கொண்டு

ஈப்போ,

மாடர்ன் பிரிண்டிங் கம்பெனியில் அச்சிடப்பட்டது.

1930.

2670

உ

நம்பர் 723 சிவமயம்.

**தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,**

**திருவள்ளுவர் நூல் நிலையம்,**

**பாகனேரி.**

ஸ்ரீமான் [illegible] அவர்களால்

இனமளிக்கப்பெற்றது.

............ ஆண்டு ............ திங்கள் ............ நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

ரு. அ. லெ.
தனவைசியர் இளைஞர் தமிழ்ச்ச
திருவள்ளுவர் வாசகசாலை
பாகம்
இ. 12
2670

ஓம்

விநாயகன்றுணை.

ஸ்ரீ ராம நாம ப்ரபாவ

ஸ்தோத்திரமெனும்

# உயிர் மெய் வருக்கப் பாமாலையும் இராம நாமாவளியும்

இஃது

சென்னைமா நகர்

ஸ்ரீ அகஸ்திய மஹரிஷி மரபு

சாது. நாராயண தேசிகர் மடாலயாதிபதி

ஸ்ரீ ஞானநந்த மணவாள தேசிகரவர்களின் பிரதம சீடராகிய

உயர் திரு சுவாமி அருணகிரிநாதரவர்களால்

செய்யப்பட்டு

ஐக்கிய மலாய் நாட்டி லொன்றாகிய

பேரா மாகாணத்தின் சமாதான நீதிபதி பட்டம் பெற்றவர்களும்

ஈப்போ வாசியும் பிரபல [illegible]

காரைக்குடி


சா. லெ. செ. செட்டியப்ப செட்டியார்

அவர்கள் விரும்பியவண்ணம்

அவர்கள் பொருளுதவியைக் கொண்டு

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

ஈப்போ,
மாடர்ன் பிரிண்டிங் கம்பெனியில் அச்சிடப்பட்டது.
1930.



ஸ்ரீராமஜெயம்.

"ஈப்போ" திருவள்ளுவர் கலாசாலைத் தலைமை ஆசிரியர்

தமிழ்ப் பண்டிதர்

வண்ணை, நெ. வை. செல்லையா அவர்களால்

இந்நூற்குதவிய

# அணிந்துரை.

"மந்திரம்" என்பது நினைப்பவரைக் காப்பது என்பது பொருள் எழுத்துக்களின் இடவேறு பாட்டால் ஒலிபேதங்கள் ஏற்படுகின்றன, "மொழி முதற்காரண மாமணுத்திரளொலி" என்பர் நன்னூலார். அணுக் கூட்டங்களின் காரியமாகிய ஓசை அணுவுலகில் பரந்து அலைப்புண்டு காற்றோடு கலந்துள்ள கவற்சிப் பொருளா வீர்ப்புண்டு நெடுந்தூரஞ் செல்லுமியல் பினவாயிருக்கின்றன. இதனை இக்காலத்து மேலைத் தேச விஞ்ஞானிகள் இருந்தவிடத்திலே இருந்து பல்லாயிர மையிலுக்கப்பால் பேசப்படுவதைக் கேட்கும் கருவியையமைத்து வெளிப் படுத்தியிருக்கின்றனர். இவ்வித்தையைப் பரத கண்டத்து யோகிகள் எக்கருவியும் இன்றிப் பேச்சுடன் நினைப்பையும் அறிகின்றனர். மந்திரமென்பது ஒன்றையடைய விரும்புமொருவரால் வாசகமாகவோ மானதயாகவோ ஆக்கப்படுவது. அப்படியாகும் போது அடைவிப்பவரை மகிழ்விக்கும் ஆற்றலுடையது மந்திரமென்பது தானேபோதரும். நாம் ஒருவரை "அடே" என்றால் வெகுளுகின்றார் "ஐயா" என்றால் மகிழுகின்றார். இவ்விரண்டெழுத்துச் சொற்கள் இவ்வாறு செய்வதை அநுபவத்தில் காண்பதால் தெய்வ சம்பந்தமாக உச்சரிக்கப்படும் மகா மந்திரங்களும் அவ்வத் தெய்வங்களை மகிழ்வித்து எண்ணிய வெண்ணியாங் கெய்துவிக்கும் மியல்புடையனவென்பது மறுக்கொணாவுண்மை. இனி எழுத்துக்களை மாற்றியும் பொருத்தமுறவும் வைத்து உச்சரிக்கும் வகையினால் அநேக நன்மை தீமைகளை உண்டாக்கும் இயல்பு எழுத்தமைப்பிற்கு உண்டாயிருத்தலை இலக்கண விளக்கம் வச்சணந்தி மாலை, பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலிய யாப்பிலக்கண நூல்களில் பரக்கக் காணலாம். இக்

கலையறிவு கொண்டு அக்காலத்துப் புலவர்களில் பலர் சாவவும் வாழவும் பாடும் பண்புடையோரா யிருந்தனர். இக்காலத்தே தமிழ்நூலறிவு சுருங்கி அதிலும் இலக்கண நூலறிவுமுற்று யொழிந்ததால் அவ்வரம் பிலாற்றலின் மையவாயின. இன்றும் அவ்வெழுத்தியல்பு முறை தெரிந்த புலவர்கள் வாக்கினின்று வரும் கவிகள் குறி தப்பாது பயனை விளைவித்து வருகின் றன. இது பற்றியே ஒருவர் மீது கவி செய்யும்போதும் வாழ்த்து முதலி யன செய்யும் போதும் மங்கல மொழி வகுத்துக் கோடல் மரபாயிற்று.

இனி இவ்விராமஜெயம் என்னும் மந்திர மொழியைக் கவிஞர் பெருமானாகிய கம்பரும் இராமாயணத்தில் அதன் பெருமையையும் மகி மையையும் அதனாலடையும் பயனையும் ஒரு கவியிலமைத்து அழகாகக் கூறியிருக்கின்றனர்.

"நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழியு மாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலைபிராமன் தோள்வலி கூறு வோர்க்கே."

இதில் ராமன் தோள்வலி-ராமஜெயம்-ஜெயம்-வெற்றி தோள் வலி-ஆகுபெ யர் ராமஜெயம் என்னும் மகா மந்திரத்தைப் பாராயணஞ் செய்வோர்க்கு நாடிய பொருள் கைகூடும், ஞானமும், புகழுமுண்டாகும், வீடியல் வழி யையும் வேரியங்கமலை நோக்கையும் ஆக்கும் என வியைந்து நிற்கும். வீடியல் வழி-முத்தியடைதற்குரிய சாதனம். வேரியங்கமலை நோக்கு- இலக்குமி கடாட்சம். மேலும், "ராம" என்னும் பதம் அட்டாக்கரத் தின் இரண்டாமெழுத்தும், பஞ்சாக்கரத்தின் இரண்டாமெழுத்தும் கூடி நின்றதால் இதனைத் தாரகமந்திர மென்பர். சடாக்கரத்திலும் இரண்டா மெழுத்தாகவே யமைந்திருக்கிறது அட்டகரும வித்தையிலும், கந்தசட்டி கவசத்திலும் அனுக் கிரகத்தானத்தையே பெற்றிருக்கின்றது, இதன் மகிமையை இரண்டாவது செய்யுளில்


"நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமு மின்றித் தீருமே
இம்மையே யிராமவென் றெழுத்தி ரண்டினால்" என விளக்கி யருளினர். இவ்வித பெருமை தங்கிய ராம மந்திரத்தை ராமதாஸ், கபீர் தாஸ், துக்காராம், ஜக்பாய் முதலிய வடநாட்டுத் தொண்டர்களும், தென் னாட்டில் சங்கீத வித்வ சிரோமணியாய் விளங்கிக் குருபீடந் தாங்கிய தியா

கராச சுவாமிகளும் தியானித்துக் காட்சியளிக்கப் பெற்றுத் திருவருட் செல்வராய் திகழ்ந்து முத்தியடைந்தோராவர். அன்றியும் இராமாயணத்தில் ஆதிமுதல் அந்தம் வரைக்கும் எக்கதையினை நோக்கினும் "ராமஜெயம்" என்னும் மகா மந்திரத்தின் பேரருட்திறம் விளங்கி நிற்பதைக் காணலாம். பட்டாபிஷேக காலத்தில் இராமபிரான் யாவருக்கும் பரிசு நல்கி ஆஞ்சநேயருக்கு ஒன்றும் கொடாதுவிட அதனையருகிருந்தறிந்த பிராட்டியார் தாசரதியை நோக்கி நாதா! எங்களுக்குப் பரமோபகாரியாயிருந்த அஞ்சனைச் செல்வனுக்கு நீர் யாதுங் கொடாதுவிட்ட காரணமென்னவென வினவ ஐயன் ஜானகி! அவனுக்கு நீயே கொடுத்து மகிழ்விப்பாயாக வெனப் பணித்தனர், அப்பணியை யேற்றுத் தேவியார் தன் மார்பிற்கிடந்த முத்தாரத்தைக் கழற்றி மாருதிக் கணிந்தனர். அதனை வாங்கி மாருதி ஒவ்வொரு முத்தாக வாயிலிட்டு மென்று உமிழ்ந்து வந்தனர். இதனைக்கண்ட தேவியார் சிறிது சினங்கொண்டு யான் செய்த சம்மானத்தை யென்னெதிரே அவமதித்திகழ்ந்தானே; தன் குலக் குணந்தனைத் தானுந் தாங்கினன். என மனமுழைந்து இராமபிரான் முகத்தை நோக்கினர். உடனே இராமரும் தேவியாரின் மனப் பான்மையை யறிந்து சீதா! அதனை நீயே கேட்டறி யென்றனர். அவ்வாறே அவரும் மாருதியை நோக்கி மாருதி? யான் உவந்தணிந்த முத்து மாலையை ஏன் அவமதித்தாய் என்றனர். மாருதியும் பணிவுடன் தாயே! தாங்கள் கருதியபடி நான் அவமதித்திலேன். அம் முத்துக்களில் "ராம" ரசம் இருக்கிறதா என்று சுவைத்து இல்லாததால் உமிழ்ந்தேனேயன்றி வேறொன்றல்லவென்று நாணித் தலைகவிழும்படி உத்தரங்கூறினர் என ஓர் கதையுள்ளது. இதினால் சீதாதேவியுங் கண்டனுபவிக்காத ராமநாமத் திவ்விய ரசத்தை அநுபவித்துப் பரம பாகவதராய் விளங்கிய அருட்டிறத்தால் வைணவசம்பிரதாயத்தில் சிறிய திருவடியெனப் போற்றப்பட்டு விளங்குகின்றார்.

இறைவன் கொண்டருளிய நிக்கிரக அவதாரம் ஐந்தினுள் ஸ்ரீராமபிரானது சர்வ மங்கள குணானுபவ பரமைஸ்வரியமாகிய "ராமஜெயம்" என்னும் மறை மொழியை ராமோபநிஷத்தில் கூறியபடி நாடோறும் ஆயிரம் உருச்செபித்தெழுதிய பின்னரே உண வருந்தும் நியதியுடையவரும்; காரைக்குடி நகரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்; தனவணிக குலோத்தமரும்; ஐக்கிய மலாய் நாட்டிலொன்றாகிய பேரா மாகாணத்தின் சமாதான நீதிபதிப் பட்டவர்த்தனரும்; ஈப்போ வாசியும் பிரபல வர்த்தகருமாகிய திருமிகு செட்டியப்ப செட்டியாரவர்கள் சிலவாண்டுகட்கு முன்னர் குண்டு மருந்திட்டு வைத்திருந்த துப்பாக்கி யொன்றைத் தமது வீட்டில் தம்மைக் காண வந்தாரொருவர் தற்செயலா யெடுத்துப்

பார்க்க நேர்ந்தபோது அது தவறி வெடித்து "ராமஜெயம்" மந்திரத்தை மனனம் பண்ணி எழுந்திருந்த அண்மையில் அவர்கள் காலொன்றில் தாக்கியது. அத்தாக்குதலானது கால் சிதறும்படி ஊறு படுத்திக்குண்டும் புறம் போந்து நிற்குமியல்பினவாயிருக்க அவ்வாறின்றி மிக எளிதாக வைத்தியம் செய்யவும் காயம் ஆறவும் காலானது எவ்வித ஊனமுமின்றி முன் போலிருக்கவும் துணை செய்தது "ராமஜெயம்" மந்திரத்தின் மகிமையன்றோவென வெண்ணி முன்னிலும் அதிக அன்பு கொண்டு தியானித்து வரலாயினர்.*

பின்பு சென்னை மாநகர் அகத்திய முனிவர் பரம்பரை சாது ஸ்ரீநாராயண தேசிகர் மடாலயாதிபதி ஸ்ரீ ஞானாநந்தமணவாள தேசிகரவர்கள் மூதன் மாணுக்கராகிய உயர் திரு. சுவாமி அருணகிரிநாதரவர்கள் ஈப்போ நகருக்கு வந்தபோது அவர்களைக்கொண்டு "ஸ்ரீராம நாமப் பிரபாவதோத்திர உயிர் மெய்வருக்கப் பாமாலை" யென்னும் திவ்விய பிரபந்தத்தைச் செய்வித்து "ராமஜெயம்" மந்திர பக்தியைச் செட்டியாரவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இந்நூலகத்து அகரமுதல்னகர இறுவாயாக விருத்தப்பாவில் 33. செய்யுளும் ராம நாமாவலியும் அடங்கியிருக்கின்றன. ஆசிரியர் பகவான் துட்டநிக்ரக சிட்ட பரிபாலனார்த்தம் வற்றுள்ள அவதாரங்களுள் முக்கியமாகிய பத்தவதார விசேடங்களையும் சுருக்கிக் கூறியதோடு இராமாயணத்தில் உள்ள ஒவ்வோர் சரித்திரத்தையும் பெரும்பான்மையும் தழுவிக் குறிப்பாகக் காட்டிச் செல்லும் சாதுரியம் மெச்சத்தக்கதே. வாக்கு நயமும், போக்கு நயமும், தாக்கு நயமும் சுவைத்ததும்பி நிற்கின்றன. எமது பார்வையிலும் சில திருத்தங்களைப் பெற்றுமிளிர்வதற்கு ஏதுவான சிலர்க்குள்ளது போன்ற கல்விச் செருக்கற்ற உத்தம குணமொன்றே அவர்களது கல்வியினுழத்துக்கும், அறிவின் நீளத்துக்கும் சான்ருகும்; நறுமணங்கமழ்ந்து அன்புப்பிரசம் அவிழ்ந்து சொட்ட நறுங்கண்ணிச்செந்தமிழ்த்தொடையலை "ராமஜெய" பக்தராகிய செட்டியா ரவர்களால் சர்வலோக சரண்யனுகிய ஸ்ரீராம பிரானது சாணாரவிந்தத்தில் புனைந்து சூட்டிய ஆசிரியற்கும் மேற்படி செட்டியாரவர்களுக்கும் என்றென்றும் திருவருள் முன்னின்று காப்பதாக. இப்பிரபந்தத்தில் ஆதியிலும் அந்தத்தும் அகர, உகர, மகர முதலிய ஐவகை யோங்காரத்தில் சிருட்டி, திதி, சங்காரமென்னும் முத்தொழிலேயு மடக்கி நிற்கும் ஓங்கார மகா மந்திரத்தொனியால் ஆரம்பித்தும் முடிவடைந்தும், நிற்பதால் இதுராம பக்தர்கள் பாராயணஞ் செய்து சித்தியடைவதற்கு மிகவும் ஏற்றதாதலின் தவருது ஒவ்வொருவரும் பாராயணஞ் செய்து இதன் பலனை அனுபவிக்க வேண்டுகின்றோம்.



உ

ஸ்ரீராம ஜெயம்.

# சாத்துக்கவி

## அரியக்குடி
## ஸ்ரீமாந். சா. கி. ரெ. இலக்குமணச் செட்டியாரவர்கள் இயற்றியது.

கன்னலொடு கமுகுபலா நிறைந்தோங்கு பூங்காவுங் கவினு மாடந்
துன்னியசீர்த் தென்பாண்டி நாடதனிற் காரைநகர் துலங்க வந்தோன்
மன்னியசீர் வணிகர்மர புதித்தரியை வாழ்மாயன் மருவும் மார்பிற்
பொன்னினையுந் தினமறவான் செட்டியப்ப புனிதனெனும் புகழ்மிக்கோனே (1)

அன்னையினுந் தயையுடையான் கன்னனெனத் தன்னருகு சார்ந்தார் யாற்கும்
மன்னனென நிதியுதவி மகிழ்வுறுத்தி யுடனிறுத்தும் மாண்பு வாய்ந்தோன்
சொன்னகலை யனைத்தினையு மாராய்ந்தன் னெறிவழியே யொழுகுந் தூயோன்
என்னைமரு மகனெனவே யனுதினமு மினிதழைக்கு மின்ப மிக்கோன் (2)

காரைநக ரிருந்துவந்து மலயாவி லீப்போவிற் கருணை வாய்ந்த
பேரைநக ராசாளு மன்னர்பிரான் பிறந்ததினப் பெருவி ழாவில்
ஆர்வமொடு தனக்களித்த நீதிபதி யெனும் ஜே. பி. யார்ந்த பட்டஞ்
சீர்பெறவே தாங்கியதன் வழியொழுகுங் குணங்கள்பல சிறக்க வாழ்வோன் (3)

தானடைந்த நலனனைத்து முலகினர்க ளடையவெண்ணுந் தன்மையாலே
தேனடைந்த துளாய்மௌலி யெங்கள்குலப் பரந்தாமன் றிருவி னோடுங்
கானடைந்தி ராவணனோ டரக்கரைவீட் டுலகினரைக் காத்த காதை
யானதிரு ராமஜெயப் பாமாலை யருளுகென அன்பாய் வேண்ட (4)

சொன்னயமும் பொருணயமு நனிவிளங்கப் புலவர்குழாந் துதிக்கச் சென்னை
நன்மலைய முனிமரபின் மணவாள னடிக்கமல நாளும் போற்றி
பின்னமிலாத் தன்னுருவே பிரமமெனக் கண்டமர்ந்த பெரும்பேருளான்
இன்னமுத மொழிபகர்வோ னருணகிரி நாதனிதை யிசைத்திட்டானால் (5)

தாப்பா, 17–10–1930.

உ

ஸ்ரீராமஜெயம்.

## காப்பு

ஆரணங்க ளேத்தரிய வச்சுதனைக் காட்டுமொரு
தாரகநா மப்பெருமை சாற்றுவேன்! பாரதத்தை
மேருவரை மீதில் விளம்பு மொருகோட்டு
வாரணத்தை யென்னுளத்தே வைத்து.

## கலைமகள் துதி

நான்முகத்தோ னுவின் நடுநின்று நான்மறைநூல்
தான்விரித்த வன்னையே! தாரகமாங்—தேன்பிலிற்றுங்
கம்பரா மாயணத்தைக் கம்பனு வாற்சொரிந்த
அம்பிகையென் னுவிலிருந் தாள்.

## திருமகள் துதி

உலகமெலா மீன்றதனை யோம்புந் திருவே!
நலமெலா நல்குமொரு நட்பே!—திலகமென
மண்ணுலகும் விண்ணுலகும் வாழ்த்துகின்ற மைதிலியென்
எண்ணமெலா மீடேற்ற வெண்.

## நம்மாழ்வார் துதி

கடபடமாய்த் தோன்றுகின்ற காசினியு மற்றுஞ்
சடசரீரத் தன்மையையுஞ் சாற்றின்—மடனுல்
வடமூலத் தேயமர்ந்த வத்துவினிற் பொய்யென்
சடகோபன் றூளே சரண்.

## குரு வணக்கம்

அருளே வடிவாய் அவனிதனில் வந்த
தெருளே! யடியருளத் தேனே!—ஒருமொழியால்
தத்துவத்தைக் காட்டுஞ் சமர்த்தே மணவாள
நித்தியனே யென்னுளத்தே நில்.

## அருளிறை வணக்கம்

ஏகாக் கரத்து ளிலங்கும் முருகோனே
வாகாக்க வென்னுள்ளே வாழ்வோனே!—மோகாதி
தாபத் திரையந் தணிக்குமொரு தண்ணளியே
ஆபத்தெல் லாநீக்கு வாய்.

## ஏற்புடைக்கடவுள் துதி

அண்டங் கள்பல வாக்கி யளித்துமீண்
டுண்டு மிழ்ந்தரு ளோங்கு மொருபொருட்
கண்டு யச்செயும் காரணை தாரகத்
தண்ட மிட்டொலத் தண்ணருள் செய்யுமே.


## நூற்பயன்

ஆதி வேத முபநிட மாகமம்
நேதி நேதியெ னவோத நின்றதோ
ராதி யந்தமி லாத வமலனை
ஓது மித்தமி ழோதப் பெறுவரே.

---

## அவையடக்கம்

தாரக மிரண்டெழுத்தின் சதுரினைச் சாற்றவின்னூல்
யாரவ னியற்றினனென் றிகழ் வரோ! புலமை மிக்கார்
ஊரகங் கணத்தினீரு முவரியைச் சார வன்னீர்
சார்ம தேற்றுமாசு தவிர்த்திடு முறைமை கண்டார்.



ஸ்ரீ ராமஜெயம்

# ஸ்ரீ ராம நாமப் பிரபாவ, தோத்திரமெனும்

# உயிர் மெய்வருக்கப் பாமாலை.

அகரமென வறிவாகி யகிலசர வசரவுயி
ராக்குவதும் ராம ஜெயமே
ஆழ்வார்கள் பன்னிருவர் பாடுதமிழ் மாமறைக
ளறைவதும் ராம ஜெயமே
உகரமென வண்டபகி ரண்டத்து ளுயிர்கடமை
யோம்புவதும் ராம ஜெயமே
ஓதரிய நான்மறைக ளுபநிடத மாகமத்
துட்பொருளும் ராம ஜெயமே
மகரமென நின்றுலகின் மன்னுயிர்கள் யாவையு
மறைத்தருள்செய் ராம ஜெயமே
மாமறைக ளோத்தரிய வைகுந்த வீட்டினிடை
வாழ்வதும் ராம ஜெயமே
நகரதன வணிகர்கோன் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 1.

ஆரமுத வேலைநடு வாலிலையி லோர்மகவ
தாகியொளிர் ராம ஜெயமே
ஆழியிடை சோமுக னமிழ்த்தமறை நூலைவெளி
யாக்கியதும் ராம ஜெயமே
தாரகம தாயமர ராழிகடை போதலகு
தாங்கியதும் ராம ஜெயமே
தராதல மெலாஞ்சுருள தாக்கிமறை யசுரனைத்
தாக்கியதும் ராம ஜெயமே
பாரகமெ லாமாண்ட மாபலியி னூரமெலாம்
பற்றியதும் ராம ஜெயமே
பன்னரிய நெடியவுரு வாகியவன் முடிமீது
பதமருளும் ராம ஜெயமே
நாரணி கடாட்சமிகு செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 2.

இம்பருல கத்தவரு மும்பருல கத்தவரு
மெண்ணு மொரு ராம ஜெயமே
இல்லைநமை யன்றியொரு கடவுளரு மில்லையெனும்
இரணியனை ராம ஜெயமே
தம்பமதில் நரசிங்க வுருவாகி யவனுடல்
தகர்த்ததும் ராம ஜெயமே
தனைநம்பு பிரகலா தடியர்க்கு வேண்டுவரம்
தந்ததும் ராம ஜெயமே
அம்பிகை இரேணுகா தேவியின் றிருமகவ
தாகியதும் ராம ஜெயமே
அன்னையென இரேணுகையை யுன்னாது தந்தைமொழி
யாற்றியதும் ராம ஜெயமே
நம்பனடி மறவாத செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 3.

ஈரேழு புவனத் தியங்கியற் பொருளெலாம்
ஈடேற்றும் ராம ஜெயமே
இமையவர்க ளோடுநமர் துயர்தீர வந்தருள்செய்
ஸ்ரீராம ராம ஜெயமே
காரேழு சூல்கொண்டு நின்றாங்கு கௌசலைதன்
கருவிலுறும் ராம ஜெயமே
கார்வண்ண னென்னுமோர் மதலையாய்த் தசரதன்
கலிதீர்த்த ராம ஜெயமே
ஓரேழு மெட்டொன்று கலைமதிக ளொருகோடி
ஒளிர்வதன ராம ஜெயமே
ஒருதம்பி லக்குமண ணோடுபல நதியாடி
யுற்றதவ ராம ஜெயமே
நாராளும் வணிகேந்திர செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 4.

உலகாகி யுயிராகி யுயர்பரம தாகியுள்
ளொளியான ராம ஜெயமே

ஒப்பறுவிஸ் வாமித்ர முனிவர்பின் னநுஜனோ
டுற்றாகு ராம ஜெயமே

பலகாலும் முனிவேள்வி இடர்செய்தா டகைசிரம்
படவீழ்த்த ராம ஜெயமே

படிமீது கண்மணியை இமைகாத்த வாறுமுனி
பணியாற்றும் ராம ஜெயமே

நிலமேற் கிடந்தசிலை யகலிகையி னுருவாகி
நிற்கவருள் ராம ஜெயமே

நெஞ்சமதின் வஞ்சமற அஞ்சலிசெய் யடியவர்தம்
நெஞ்சிலுறை ராம ஜெயமே

நலமேவு காரை நகர் செட்டியப் பன்றினம்
நவின் றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராம ஜெய ராம நிதியே 5.

ஊக்கமொடு பூக்கள் தூய் நோக்குமடி யார்முன் வரும்
ஒண்பொருளும் ராம ஜெயமே

ஒப்பரிய கற்பின்மகள் நப்பின்னை மெய்ப்புளக
முற்றிடவும் ராம ஜெயமே

தூக்கமுடி யாதசிலை நோக்கமுனி காற்கடையிற்
றூக்கியதும் ராம ஜெயமே

துண்ணென முறித்துநக வண்ணமுறு ஜனகன்மகள்
தொடைசூடும் ராம ஜெயமே

தாக்கணங் கொடுதேவர் பூக்கள் வரு டம்பொழியும்
தாசரதி ராம ஜெயமே

ஜானகி சமேதனுய்க் காட்சிதரு மன்றல்புரி
சந்தான ராம ஜெயமே

நாக்கிதழ் தழும்புறச் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 6.

எந்தையார் லட்சுமண பரதசத் ருக்னர்கள்
இன்பமுற ராம ஜெயமே

ஏந்தலின் குமரியொரு மூவரை மணம்புரிந்
தேற்றமுறும் ராம ஜெயமே

தந்தைதாய் சதுரங்க சேனையொ டயோத்திநகர்
தானேகும் ராம ஜெயமே

தன்மர பழித்துவரு பரசுரா மன்வலிவில்
தான்வாங்கும் ராம ஜெயமே

சிந்தைகளி கூர்ந்திடும யோத்திநகர் வாழவரும்
ஸ்ரீராம ராம ஜெயமே

சிற்றன்னை ராகவா! சென்றுவா! வனமெனச்
சிந்தைமகிழ் ராம ஜெயமே

நந்தாத கொடைவள்ளல் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 7.

ஏந்தலின் மிக்கான ரகுராமன் வனமேக
ஏற்குமோ ராம ஜெயமே

என்றன்னை தந்தையர்கள் குடிகளுற வோருமழ
எந்தைரகு ராம ஜெயமே

காந்தையொடு லட்சுமணர் கண்ணிமைக ளாய்நினைக்
காக்கவரும் ராம ஜெயமே

கவலைமிகு கௌசலைமன் தசரதர்க கறமோதிக்
கடிதேக ராம ஜெயமே

மாந்தளி ரெனச்சீதை தம்பியும்பின் றொடர
வனமேகும் ராம ஜெயமே

மாபக்த சீலகுகன் ஓடமதி னற்கங்கை
வழிதாண்டும் ராம ஜெயமே

நாந்துணைகொள் மந்திரம் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 8.

ஐயமிடு வார்க்கருள்செய் மெய்யனே யென்றுய
ரகற்றியருள் ராம ஜெயமே

அக்குகனு மன்புடனெ தந்தநூ ணுண்டருள்செய்
ஆனந்த ராம ஜெயமே

செய்யதவ மாமுனி பரத்வாச ராசிரமம்
தேடிவரும் ராம ஜெயமே

சீதையனை லட்சுமண ரோடுமுனி மகிழ்வெய்த
சேவைதரும் ராம ஜெயமே

மெய்யனின் பெருமையறி மாமுனியின் விடைபெற்று
விண்டேகும் ராம ஜெயமே

மேவினோ ருளமகிழும் சித்ரகூ டக்கிரியை
மேவியதும் ராம ஜேயமே

மையுமுயி ருணுணுச் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே

ஒத்துமன மெய்மொழிகள் சித்ரமென வேகிரியி
லோம்புதவ ராம ஜெயமே

ஒப்பரிய நற்றம்பி பரதனின் முடிசூட
ஒப்பாமல் ராம ஜெயமே

சித்தமிக வாடியே சேனையொடு நின்பதம்
தேடிவரும் ராம ஜெயமே

தேவநின் முடிசூட வேற்குமோ வென்றுபணி
சீர்பாத ராம ஜெயமே

பத்திமிகு பரதனைப் புத்திசொலி அரசியல்
பணிக்கும்ரகு ராம ஜெயமே

பந்தமறு பாதுகையை எந்தையே அருள்கவெனப்
பதமருள்செய் ராம ஜெயமே

நத்தியரி பத்திபுரி செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 10.

ஓதரிய பரதனைச் சேனையொடு நகர்செல
வுரைத்தருளி ராம ஜெயமே

உதிர்சருகு கனிகிழங் குண்டுசெலும் வனவாசம்
உற்றதவ ராம ஜெயமே

வேதநவி லத்ரிமுனி யனுசூயை யாசிரமம்
மேவியதும் ராம ஜெயமே

மிகவாழ்த்தி யனுசூயை தந்தவுடைபணி யேற்று
விடைபெற்று ராம ஜெயமே

ஆதவனின் ஒளிபூமி யணுகாத தண்டகா
ரண்யம் வரும் ராம ஜெயமே

அந்தகன் போல்வரு விராதனை மடித்தருள்செய்
ஹரிராம ராம ஜெயமே

நாதனிணை யடிபரவு செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 11

ஔவிய மிலாதமுனி சரபங்க ராசிரமம்
அணுகியதும் ராம ஜெயமே

ஆயிரங் கண்களொடு தேவர்கோன் கண்டுதொழு
மயோத்திரகு ராம ஜெயமே

செவ்விய பதம்வேண்டு சரபங்கர் வைகுந்தம்
சேரவருள் ராம ஜெயமே

தேனருவி பாய்கின்ற தண்டக வனத்திடையில்
சென்றதும் ராம ஜெயமே

எவ்வித மரக்கர்துய ரேகுமென வாலகில
ரெண்ணியதும் ராம ஜெயமே

எதிர்சென் றமாமுனிகள் இன்பமுற வேயபயம்
ஈந்தருள்செய் ராம ஜெயமே

நவ்வையறு குணசீலன் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 12.

கண்டவர்தம் வினைமாற்று தண்டமிழ்க் குருமுனியைக்
காணவரும் ராம ஜெயமே

கண்டகலை மாமுனிவர் குண்டிகைநீர் பெய்துமகிழ்
கலிவரத ராம ஜெயமே

அண்டரொடு தொண்டர்கலி விண்டுவரு புண்டரீ
காட்சராகு ராம ஜெயமே

ஆண்டுபல் லாண்டுநீ வாழியென வேசொன்முனி
ஆசிபெறும் ராம ஜெயமே

பண்டைமுனி மந்திரவில் பாணமுடன் வாள்தரவே
பற்றிமகிழ் ராம ஜெயமே

பஞ்சவடி யேகிநீ இருவென்ற முனிமொழிப்
படியேகும் ராம ஜெயமே

நண்டமிழ வணிகர்குல செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 13.

நப்போர் விளக்கும்ரகு நாதனே அடியர்பவ
நாசனும் ராம ஜெயமே

நடுவனத் தொருகுன்றின் மீதிலொளிர் கழுகரசை
நாடியதும் ராம ஜெயமே

அப்பனே! வருகநீ! ரார்கொலோ! வென்றபெரி
யப்பர்முன் ராம ஜெயமே

அஞ்சலிசெ யோத்திநகர் மன்னன்மக னென்றுசொலும்
ஐயனும் ராம ஜெயமே

செப்பரு சடாயுவிரு பக்கமது வாலணைத்
தேங்கியழ ராம ஜெயமே

தேற்றியவர் கேட்டவரம் ஈந்துபின் பஞ்சவடி
சேர்ந்தரகு ராம ஜெயமே

நப்பின்னை யருள்மேவு செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 14.

சற்குணத் தம்பிஜா னகியொடும் பஞ்சவடி
தானுற்ற ராம ஜெயமே
தக்கதோர் பன்னகச் சாலையை யமைத்ததிற்
றங்கியதும் ராம ஜெயமே
துர்க்குண வரக்கர்குல சூர்ப்பனகி மையல்கொடு
சொக்கிவிழ ராம ஜெயமே
சுத்தசன் மார்க்கநெறி சொல்லியும் கேட்காத
துர்க்குணியை ராம ஜெயமே
தற்குணம்போகா தரக்கி நீ போவெனச்
சாற்றியதும் ராம ஜெயமே
தம்பியது கண்டவளைப் பங்கமுறச் செய்சிட்சை
தருமென்ற ராம ஜெயமே
நற்குணச் சீலனும் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 15.

ஞமலிபோ லோலமிடு சூர்ப்பனகி தன்கிளைகள்
நாடிவர ராம ஜெயமே
நகநகென கரதூஷ ணதிவரும் நிலைகண்டு
நாணேற்றும் ராம ஜெயமே
எமனுலகு புக்கவே கரதூஷ ணதியரை
யீர்ந்ததும் ராம ஜெயமே
இராவணன் றங்கைசொற் கேட்டுவிடு மாரீசன்
எதிர்தோன்ற ராம ஜெயமே
கமலவிழி மானந்த மான்வேண்ட வேயுடன்
கடிதேகும் ராம ஜெயமே
கலைமானே வல்லவிது மயல்மா னெனக்கண்டு
கணையேவும் ராம ஜெயமே
நமநமோ வென்றுதுதி செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 16.

இடம்பர்செ யிடும்பையை விடும்பகழி யாலோட்டும்
இரவிகுல ராம ஜெயமே

ஏவுமோ ரம்பினால் வீழ்ந்திடும் மாரீச
னிடுவோலம் ராம ஜெயமே

விடம்பரவி னாலெனச் சீதையனை காதினில்
விழுந்ததும் ராம ஜெயமே

மெய்மையறி யாப்புனிதை சொல்மொழியி னாலிளவல்
விண்டுவர ராம ஜெயமே

மடம்பரவி ராவணன் பன்னகச் சாலையிடை
மாறிவர ராம ஜெயமே

மாயமாச் சீதையை யெடுத்தேக வேதம்பி
வருகவும் ராம ஜெயமே

நடம்புரி பதம்பரவு செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 17.

அணங்குதனி யாகநீ ! வந்ததேன் றம்பிசொல்
ஆ ! வென்ற ராம ஜெயமே

அன்புடைய தம்பிசொல் லதுகேட்டு பன்னகம்
அடைந்துருகும் ராம ஜெயமே

கணங்குழற் சீதையைக் காணும லடையாளம்
கண்டேகும் ராம ஜெயமே

கழுகரசர் வெட்டுண்டு மூர்ச்சித் திருப்பதைக்
கண்டுருகும் ராம ஜெயமே

வணங்கியிரு கைகளால் மார்போ டணைத்தழும்
வாஞ்சைமிகு ராம ஜெயமே

வரலா றுரைத்தபே ருடையாரி னுயிர்நீங்க
வாழ்வருளும் ராம ஜெயமே

நணங்குவி மனம்புனித செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 18.

தந்தையாம் கழுகரச ருடலினைத் தன்கையாற்
நகனித்த ராம ஜெயமே

தண்ணீருக் கேகுமொரு தம்பியா லசமுகித்
தனமீர்ந்த ராம ஜெயமே

முந்தைவினை யால்வரு கவந்தவுரு வன்றோள்
முறித்ததும் ராம ஜெயமே

முன்னுரு வடைந்தவன் சீதையினை மீட்டும்வழி
மொழியவும் ராம ஜெயமே

சிந்தைமகிழ் வோடுநற் சபரியின தாசிரமம்
சேர்ந்ததும் ராம ஜெயமே

செந்தண்மை யாளீந்த கனிபரிவி னோடுண்டு
திருவருள்செய் ராம ஜெயமே

நந்தமிழ்க் கலைவளர் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 19.

நற்றவச் சபரிசொன் னெறிவழிச் சுக்ரீவ
நகமேகும் ராம ஜெயமே

நாட்டமுறு கவியரசன் வாட்டமற முகில்போல
நண்ணிவரும் ராம ஜெயமே

கற்றவர்கள் தொழுதேத்து முற்றுமுண ரநுமனும்
கண்டுதொழும் ராம ஜெயமே

கருதரிய மாருதியின் வீரமொழி வாய்மையைக்
கண்டுமகிழ் ராம ஜெயமே

சுற்றமொடு நம்மையுந் தொல்லுலகெ லாங்காக்குந்
துரைவீர ராம ஜெயமே

துணையாகு மென்றநுமன் சொன்னவுடன் சுக்ரீவர்
தொழுதேத்தும் ராம ஜெயமே

நற்றுணை யெனக்கருதி செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 20.

பல்லுயிரெ லாங்காக்க வில்லேந்தி வந்தவொரு
பரிதிகுல ராம ஜெயமே

பலமிக்க வாலியா னலிவுற்ற சுக்கிரீவன்
பயநீக்கும் ராம ஜெயமே

வெல்லுமொரு திறமையைக் கவிகாண மரமேழும்
வீழ்த்தாகு ராம ஜெயமே

மேருபோற் றுந்துபி எலும்பினைத் தம்பியால்
வீசியதும் ராம ஜெயமே

கல்வினை நிகர்த்ததோண் மல்வீர வாலியைக்
கடிந்தருள்செய் ராம ஜெயமே

கவலைக ளெலாநீங்கிச் சுக்ரீவன் முடிசூடிக்
களிக்கவருள் ராம ஜெயமே

நல்லுயிர்க் குயிராகச் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 21.

மராமரா வென்றிடு கிராதனையும் வான்மீக
வடிவாக்கும் ராம ஜெயமே

மழைநாட் கழித்தெழுப தாயிரவெ ளங்கவியும்
வருகவெனும் ராமஜெயமே

வராமலே கவிராஜன் மதுவுண்ட வெறியினல்
மறந்திடவும் ராம ஜெயமே

மரமேழும் வாலியும் வீழ்த்தவொரு பாணமது
வருமென்னும் ராம ஜெயமே

தராதல மெல்லாமுடன் கிடுகிடென வேதம்பி
தானேக ராம ஜெயமே

சைனியமெ லாங்கூட்டி சுக்ரீவ னநுமனெடு
தான்பணியும் ராம ஜெயமே

நராநரர்கள் கொண்டாடச் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 22.

இயக்கரொடு கந்தருவர் வானவர்கள் பூமழை
இறைக்கும்ரகு ராம ஜெயமே
இனியுலக மூய்யுமோர் லக்குமியை யடைவமென்
றெண்ணிமகிழ் ராம ஜெயமே
தயக்கமறு மாருதீ! நின்னன்னை ஜானகீ
தங்குமிடம் ராம ஜெயமே
ஜடுதியில் கண்டுவா! பிடிகணை யாழிநீ!
தாவென்னும் ராம ஜெயமே
ஜெயக்கம்ப ஞட்டுனின் றிருவடிகள் துணைகொண்டு
செல்லநுமன் ராம ஜெயமே
திக்கெலாந் தேடியுங் காணுமற் சம்பாதி
செப்பியதும் ராம ஜெயமே
நயக்குண மெலாமேவுஞ் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 23.

அரனுருவ தாய்வந்த மாருதிம கேந்திர
மதிலேகி ராம ஜெயமே
அடைக்கல மெனநக முதைக்கவே யண்டங்க
ளாடியதும் ராம ஜெயமே
சரராம வள்ளலது கீர்த்திபோல் விண்மீது
தாவியதும் ராம ஜெயமே
சத்தசா கரமெலாந் தாண்டியே லங்கையைத்
தான்காணும் ராம ஜெயமே
அரண்மனைக ளாஸ்தானம் யாவுமணு வணுவாக
வாராய்ந்து ராம ஜெயமே
அசோகவன நடுவிலே யன்னையைக் கண்டுமகிழ்
அநுமந்த ராம ஜெயமே
நரநாரணு வென்று செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 24.

உலகெலா மீன்றபே ரன்னையைக் காவல்செய
ஒப்புமோ ராம ஜெயமே

உத்தமியின் கற்புநிலை யோங்கவு மரக்கர்குல
மொழியவும் ராம ஜெயமே

அலகிலா விளையாடல் புரிகின்ற தோ! வென்னு
மநுமந்த ராம ஜெயமே

அரக்கியை மயக்கியே யநுமந்த னன்னைமுன்
னடிபணிய ராம ஜெயமே

திலகமாம் சீதைநீ! யாரென்ன ஸ்ரீராம
தூதனென ராம ஜெயமே

தேவநின் கணையாழி யீந்ததும் அன்னையுயிர்
திரும்பியது ராம ஜெயமே

நலமெலா முண்டாக செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 25.

வத்திய வுடம்பெலாங் கணையாழி கண்டதும்
மலர்ந்தன்னை ராம ஜெயமே

மைந்தனே இளவரசு ரகுநாதர் வாழிசொல்
வாய்யென்னும் ராம ஜெயமே

முத்திமுத லையநின் நிலையெலாம் மாருதி
மொழிந்ததும் ராம ஜெயமே

முப்பத்து நாட்களில் ரகுநாத ரென்னைமீட்க
முடியுமேல் ராம ஜெயமே

புத்திரா வென்னையவர் காணுவ ரெனச்சொலும்
புனிதையனை ராம ஜெயமே

பொற்புமிகு கணையாழி கொடுவென்று நின்பதம்
போற்றிசெயும் ராம ஜெயமே

நத்தினர் குறைநீக்கும் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 26.

தழல்போலு மன்னைகொடு கணையாழி மாருதி
தான்வாங்கி ராம ஜெயமே

தளிர்த்தோங்கு பூஞ்சோலை யாவையு மழித்ததைத்
தான்கண்டு ராம ஜெயமே

சுழல்போ லரக்கர்படை சூழ்ந்தநு மனைப்பிணியும்
சடுமென்ன ராம ஜெயமே

சுட்டிலங் காபுரிப் பட்டணமெ லாம்விண்ணிற்
றோன்றநும ராம ஜெயமே

விழலாகி யேயிங்கு வருவனோ வென்றெண்ணும்
வேளைதனில் ராம ஜெயமே

மீண்டுவரு ராமபா ணம்போல அநுமனோர்
விளங்கமகிழ் ராம ஜெயமே

நழுவாத வாய்மையான் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 27.

அளவிலா மகிழ்வோடு கைகூப்பி வருகின்ற
யநுமந்த ராம ஜெயமே

அன்னைகளை யாழிதனை யீந்ததும் மிக்கவா
நந்தமுறும் ராம ஜெயமே

துளவுகமழ் மார்பினுள் சொன்னசொல் அநுமயென்
சொல்லெனும் ராம ஜெயமே

தோகைசொன் மொழியதைக் கேட்டதும் தோள்துடி
துடிக்கும்ராகு ராம ஜெயமே

தளமெலாங் கிடுகிடென தளமாற் பரிக்கவரு
சாமிராகு ராம ஜெயமே

சாகர நெருங்கிய வுடன்சேனை யாவையும்
சரிபார்க்கும் ராம ஜெயமே

நளகூப நிதியொத்த செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 28.

அறவாழி யையனே ஆழியிடை தானைசெல
அணைகட்டும் ராம ஜெயமே
அன்னையைக் காமுற்ற அன்னவன் றம்பிக்கும்
அபயமருள் ராம ஜெயமே
துறவாமல் உயிர்வாழ ராவணன் றன்னிடம்
தூதுவிடும் ராம ஜெயமே
துர்க்குண வரக்கர்குல மூலபலம் யாவையுந்
துண்டித்த ராம ஜெயமே
திறவீர ராவணன் உயிர்நீங்க வன்மார்பு
செகுத்ததும் ராம ஜெயமே
செப்பிய படிக்கவன் றம்பிக்கு முடிசூடும்
ஜெயவீர ராம ஜெயமே
நறவுகமழ் மலர்தூவி செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 29.

அனமின்றி யேநோன்ப தாற்றுமோர் சீதையை
அழைத்துவர ராம ஜெயமே
அநுமந்த ராழ்வார் விபீஷணர்க ளாதியை
அனுப்பியதும் ராம ஜெயமே
மனஞண வருசீதை அநன்மூழ்கி மாறிவர
மகிழ்வாகும் ராம ஜெயமே
வானரா திபர்சூழப் பாரத்துவா சீர்மம்
வந்ததும் ராம ஜெயமே
சனன்மூழ்கு முன்னம்பி மாருதீ என்வரவு
கழறென்னும் ராம ஜெயமே
கணசேனை சூழவரு பரதனெதிர் கொளவந்து
கலிதீர்த்த ராம ஜெயமே
நனவுகன வுகளிலும் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 30.

அனைதந்தை தமர்தம்பி யுலகெலா மகிழ்வெய்தும்
ஆனந்த ராம ஜெயமே

அயோத்திமா நகருலக முழுதையும் பாதனு
லழகுசெயும் ராம ஜெயமே

கனைகடலி னுற்சூழ்ந்த புவியரசர் யாவரும்
காணவரும் ராம ஜெயமே

கனகசிங் காதனந் தனிலேறி ஜனகியொடு
காட்சிதரும் ராம ஜெயமே

மனைவியொடு மாமுனி வசிட்டனுர் சூட்டுமொரு
மகுடமொளிர் ராம ஜெயமே

வாழிநின் மலரடிகள் வானகமும் வையகமும்
வாழிரகு ராம ஜெயமே

நனிமாத வத்தனும் செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

நாடிய தெலாமுதவு தாரகம் தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 31.

உலகெலா முய்யவே பலராம கிருஷ்ணராய்
யுதித்ததும் ராம ஜெயமே

உத்தமி யசோதையுட னுயர்கோன் முத்தாட
வோங்கியதும் ராம ஜெயமே

பலமிக்க பூதகியி னுயிரோடு கஞ்சனுயிர்
பருகியதும் ராம ஜெயமே

பத்திமிகு பலமாத ரோடுருக் மணிசத்ய
பாமைதொழும் ராம ஜெயமே

திலகமெனு மைவரொடு பாஞ்சாலியுங் காத்த
திருமார்ப ராம ஜெயமே

ஜெகதாதி மூலமே ஒலமெனும் யானையின்
சிறைதீர்த்த ராம ஜெயமே

நலமெலாங் குடிகொண்ட செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே

காடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 32.

மன்னுயிர்க ளோங்கக் கலிக்காவ தாரனாய்
வந்தருளும் ராம ஜெயமே
வறுமைநோய் நீங்கினற் றிருவோங்க வுங்கருணை
வைத்தருள்செய் ராம ஜெயமே
சென்னைநா ராயணர் மடத்திலுறும் மணவாளர்
சீடனார் ராம ஜெயமே
செப்புமிப் பாமாலை யோதுவார் குறையெலாந்
தீர்த்தருளும் ராம ஜெயமே
அன்னியோ ன்னியமாகி மன்னுயி ரெலாம் வாழ்க
அருள்புரிக ராம ஜெயமே
அகிலமெல் லாம்பரவு ஸ்ரீராம லக்குமண
அநுமந்த ராம ஜெயமே
நன்னிதியெ லாம்பெறுக செட்டியப் பன்றினம்
நவின்றெழுதும் ராம ஜெயமே
நாடிய தெலாமுதவு தாரகம தாஞ்ஜனகி
ராமஜெய ராம நிதியே 33.

முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

# இராமநாமாவளி.

அரி ஹரி ராகவ ராஜா ராம்
ஆன்மசொரூபம தாகிய ராம்
இருவினை மும்மலந் தீர்த்திடும் ராம்
ஈரிருமறையு ளியங்கிடு ராம்

உலகுயிர் பரமாய் நின்றிடுராம்
ஊழ்வினை யாவு மொழித்திடும் ராம்
எங்கும் நிறைந்த நிராமய ராம்
ஏகபராபர மாகிய ராம்

ஐம்பெரு பூதம தாகிய ராம்
ஐம்பொறி புலன் மனமாகிய ராம்
ஒருதனி முதலா யோங்கிடும் ராம்
ஓமெனுந் தாரக மாகிய ராம்

ஔவியமில்லார்க் கருள்செய்யும் ராம்
அஃதென சுட்ட வொணுதவ ராம்
கண்ணின் மணியாய் நின்றிடும் ராம்
காசினி போற்றிடுங் கண்ணிய ராம்

கிருபை நிறைந்த கிருட்டின ராம்
கீதையைப் பற்குனர்க் கோதின ராம்
குருகூராழ்வார் குளித்திடும் ராம்
கூடலழகிய கோவிந்த ராம்

கெருட வாகன சேவித ராம்
கேசவ மாதவ பூசுர ராம்
கையி லிலங்கிய சக்கர ராம்
கைதவர் காணுக் கடவுள ராம்

கொண்டல் நிறத்தின ராகிய ராம்
கோவர்த் தனகிரி யேந்திய ராம்
கௌசலை யீன்றிடு கார்வண ராம்
கௌசிகர் வேள்வியைக் காத்திடு ராம்

ஙப்போர் செய்திடும் ராகவ ராம்
ஙப்பினை மணந்திடு நாயக ராம்
சங்கர ளுகிய லிங்கித ராம்
சாந்தி நிறைந்த தயாபர ராம்

சின்மய மாகிய தன்மய ராம்
சீதை சமேத ளுகிய ராம்
சுத்தப் ப்ரம்ம பராத்பர ராம்
சூக்கும மாகியி லங்கிடு ராம்

செந்திரு மாமகள் நந்தன ராம்
சேய்மையு மண்மையு மற்றிடு ராம்
சைதன் னியவடி வாகிய ராம்
சைவ வைணவ மாகிய ராம்

சொல்லும் பொருளு மாகிய ராம்
சோதனைக் கெட்டா ஜோதியுள் ராம்
சௌபரி யார்க்கருள் தந்திடு ராம்
சௌபாக்ய மருள் சத்திய ராம்

ஞமலியின் நட்புக் கெளியவ ராம்
ஞாதா ஞானமு மாகிய ராம்
ஞிமிர்செயு மாழி நிறத்தின ராம்
ஞிமிருழு தொடைபுனை நித்திய ராம்

ஞெமன்கோல் போல் நடுநின்றிடு ராம்
ஞேயமு ஞானமு மாகிய ராம்
† ஞொள்கல் மனத் தர்க்கரியவ ராம்
ஞொள்க விலாத தெள்ளிய ராம்

தன்புக ழறியாத் தன்மைய ராம்
தாரக நாமத் தற்பர ராம்
திருமகள் சேவித சிற்பர ராம்
தீராப் பவநோய் தீர்த்திடு ராம்

தும்புரு நாரத சேவித ராம்
தூமணி வண்ணத் துளசித ராம்
தெள்ள முதான சீதர ராம்
தேவரும் மூவரும் சேவித ராம்

தைத்திய கால வுருத்திர ராம்
* தைனியம் போக்கு தயாபர ராம்
தொண்ட ரடிப்பொடி சேவித ராம்
தோன்றல் திரிதலு மற்றவ ராம்

தௌர்ப்பல் யத்தை தகர்த்திடு ராம்
தௌதப் பரியை நடத்திடு ராம்
நவநீத ப்ரிய நந்தன ராம்
நாடிய தெல்லாம் நல்கிடு ராம்

நிஷ்கள சகளமு மாகிய ராம்
நீலாம் பர தர பூஜித ராம்
நுதலிய கருமம முடித்திடும் ராம்
நூற்பய னன்கு மளித்திடும் ராம்

நெஞ்சின் நிறைந்த நிராமய ராம்
நேதிகளைந் தார்க் களியவ ராம்
நைஷ்டிக ரேத்தும் நாரண ராம்
நைதலொழித்திடும் தெய்வத ராம்

---

† ஞொள்கல். அலைதல், இளைத்தல், சோம்பல்.
* தைனியம். வருமை, எழ்மை.

† நொதும விலாத நிதிபஞ் ராம்
நோன்புடை யார்க்கருள் செய்திடு ராம்
* நௌபோ லக்கரை சேர்த்திடு ராம்
நத்தொரு கையினி லேந்திய ராம்

பராபர மாகிப் பரவிய ராம்
பாற்கடன் மீது வளர்ந்திடு ராம்
பின்னு பின்ன மற்றிடு ராம்
பீமா திப்ரிய சேவித ராம்

புருடோத் தமராம் புண்ணிய ராம்
பூதத் தாழ்வார் போற்றிடு ராம்
பெரியாழ் வார்தொழு பெருமித ராம்
பேயார் போற்றிடு மாயவ ராம்

பையர வதனில் நடித்திடு ராம்
பைதல்க ளறியாப் பண்ணவ ராம்
பொன்னிக் கினிய கண்ணிய ராம்
போதா னந்தத் துல்லிய ராம்

பௌருஷ முள்ள பார்க்கவ ராம்
பௌதிக துக்கம் தீர்த்திடு ராம்
மண்டல முண்டுமிழ் மாதவ ராம்
மாருதி சேவித மாபல ராம்

மிக்கோர் போற்றிடு சற்குண ராம்
மீளாப்பவ நோய் போக்கிடும் ராம்
முத்தி யளித்திடு நித்திய ராம்
மூவுரு வாகிய பூவண ராம்

---

† நொதுமல்—விருப்பு, வெறுப்பின்மை
* நௌ—மரக்கலம் (கப்பல்)

மெய்யற் கருள் செயும் மைவண ராம
மேதினி யாவையும் காத்திடு ராம்
மைதிலி நாயக மாகிய ராம்
மைத்ரி கருணை முதிதைய ராம்

மொய்ம்புடை வீரச் சம்ப்ரம ராம்
மோக நிவாரண மாகிய ராம்
மௌடிக ரறியா மாண்புடை ராம்
மௌனியர் கரணு மதிவண ராம்

யசோதை யேந்து மிலஞ்சிய ராம்
யாதனை போக்கிடு சாதக ராம்
யுகங்கள் தோறும் உதித்திடு ராம்
யூகிய ரறியும் தேகிய ராம்

யோக நித்திரை கொண்டிடு ராம்
யோக ரூடியாற் கண்டிடு ராம்
யௌவன மிக்க மெய்வண ராம்
யௌவன முடையோர் கண்டிடு ராம்

வகுளா பரண பூஜித ராம்
வாமன வடிவாய் நின்றிடு ராம்
விண்ணொடு மண்ணு மளந்திடு ராம்
வீணர்க ளறியாக் கோனவ ராம்

வெள்ளிடை மலைபோற் புல்லிடு ராம்
வேதமொ டாகம மேத்திடு ராம்
வைகுந்தத் திடை வாசவ ராம்
வைதேகி யொடு வந்தருள் ராம்

இரகுபதி ராகவ ராஜா ராம்
பதீத பாவன சீதா ராம்

பாரக மெல்லாம் வாழ்கப் பாரத தேவி வாழ்கத்
தீரனெம் காந்தி வாழ்கத் தேசிய வீரர் வாழ்க
நாரண ரடிகள் வாழ்க நான்மறை யடியார் வாழ்க
தாரக வளமை சாற்றுந் தண்டமிழ் வாழ்கமாதோ.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி:!!!

முற்றிற்று.

ஈப்போ, மாடர்ன் பிரிண்டிங் கம்பெனியில் அச்சிடப்பட்டது.